**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE SPECIAL DISTRICT COURT TO DEAL WITH MCOP CASES, TIRUPPUR.**

**MCOP No. 588/2023**

**PW1 – சாலமன் ராஜா**

Solemnly affirmed in accordance with the provisions of under Order 18, Rule 4(2) of the Civil Procedure Code and the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of **February 2026**

**Signature of witness**

**<u>சாட்சி மீண்டும் ஆஜராகி 2வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1.விபத்தில் இறந்த என்னுடைய மகள் ஆவார். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை விபத்து பற்றி நான் கேள்விப்பட்டது தான். விபத்து சமயத்தில் என்னுடைய மகள் இரு சக்கர வாகனத்தில் அமர்ந்து சென்றார் அந்த இருசக்கர வாகனத்தை மயில்வாணன் என்பவர் அந்த சமயத்தில் ஓட்டிச் சென்றார்.

2. இருசக்கர வாகனத்தில் அமர்ந்திருந்த என் மகள் தான் ஓட்டிய நபருக்கு பேச்சு கொடுத்துக் கொண்டு அவருடைய கவனத்தை திசை திருப்பியதாலும் முறையாக இரு சக்கர வாகனத்தில் பின்னால் பிடித்துக் கொண்டு வராததாலும் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

3. மேலும் மோதிய வாகனம் விபத்துக்கு காரணம் என்று அந்த வாகனத்தில் உரிமையாளரையும் இன்சூரன்ஸ் கம்பெனியில் இந்த வழக்கில் சேர்க்காததும் இந்த வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்று சொன்னால் சரி அல்ல என் மகள் தலைக்கவசம் அணியவில்லை என்றும் அவ்வாறு அணிந்து இருந்தால் இறப்புக்கான காயங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

4. நான் மனுவில் உள்ளவாறு தான் விபத்து நடந்துள்ளது என்பதை காட்ட குற்ற வழக்கில் மாதிரி வரைபடத்தை இந்த தாக்கல் செய்யவில்லை என்பதால் இந்த மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

5. விபத்து சமயத்தில் என்னுடைய மகள் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். விபத்து சமயத்தில் என் மகள் என்னைச் சார்ந்து தான் இருந்தார் என்றும் அதன் காரணமாக அவருக்கு வருமான இழப்பு எதுவும் கிடையாது என்றும் ஆகவே இந்த மனுவில் நான் இழப்பீடு எதுவும் பெற முடியாது என்று சொன்னால் சரியல்ல.

6. என்னுடைய மகளின் கவனக்குறைவு எதிரே வந்த வாகனத்தின் கவனக்குறைவு விபத்துக்கு காரணம் என்பதால் இந்த மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்று சொன்னால் சரி அல்ல.

Signature of witness.

**The deposition of the witness was typed directly into the computer by typist, according to my verbal instructions, read over to the witness, acknowledged by him, and then signed by him.**

BALU

Digitally signed by BALU
Date: 2026.02.10 19:12:26 +0530

Special District Judge,
Special District Court to deal with MCOP Cases,
Tiruppur.